DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**S.T.C.No. 2595/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | கௌரிவேல் | Age | : | 39 |
| F/N | : | புமிநாதன் | Occupation | : | விவசாயம் |
| Village | : | பட்டிணம்காத்தான் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 18th day of December 2024.

**18.12.2024**

**(எதிரி ஆஜர்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எனக்கு இராமநாதபுரம் IDBI வங்கியிலும் பாரதிநகர் CSB வங்கியிலும் வங்கி கணக்குகள் உள்ளன. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். புகார்மனுவில் மேற்படி பதில் அறிவிப்பை பற்றி நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எனது வங்கி கணக்கு பண பரிவர்த்தனை விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். நான் விவசாயம் தொழில் செய்து வருகிறேன். நான் சொன்னதின்பேரில் தான் எனது வழக்கறிஞர் புகார்மனுவை தயார் செய்தார். புகார்மனுவில் சொல்லியுள்ள சர்வே எண். 412/5 ல் அடங்கிய சொத்து யாருக்கு சொந்தமானது என்றால் சக்கரக்கோட்டையை சேர்ந்த நபரின் சொத்து என்று தெரியும். ஆனால் அவரது பெயர் தெரியாது. அந்த சொத்திற்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் ரூ. 20,50,000/-க்கு கிரைய உடன்படிக்கை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டேனா என்றால் இல்லை. புகார்மனுவில் எந்த இடத்தில், எந்த விதத்தில் நான் எதிரியிடம் 5 தவணைகளாக பணத்தை கொடுத்தேன் என்று புகார்மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**2.** மேற்படி பணத்தை நான் என்னுடைய நிலத்தை விற்றும், எனது மனைவியின் நகையை அடகு வைத்தும் கொடுத்தேன். எந்த நிலத்தை விற்றேன் என்ற விவரத்தையும், நகைகளை எந்த கடையில் அடமானம் வைத்தேன் என்ற விவரத்தையும் நிரூபிக்கும் விதமான ஆவணங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். சர்வே எண். 412/5 ல் அடங்கிய சொத்தின் உரிமையாளருக்கு ஏதேனும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. உரிமையாளரிடம் பணத்தை கொடுக்காமல் எதிரியிடம் ஏன் பணத்தை கொடுத்தேன் என்றால் பழக்க

வழக்கத்தின் பேரிலும், நம்பிக்கையின் பேரிலும் கொடுத்தேன். எதிரி எனக்கு கடந்த 20 வருடங்களாக என் அப்பா மூலம் பழக்கம். எனது மனைவி அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிகிறார் என்றால் சரிதான். எதிரியிடம் நம்பிக்கையின் அடிப்படையில் பணத்தை கொடுத்தேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. கடந்த 21.11.2014–ம் தேதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை எனக்கும், எதிரிக்கும் இடையேயான உடன்படிக்கை என்றால் சரிதான். மேற்படி சொத்திற்குரிய உரிமையாளரை நான் பார்த்துள்ளேனா என்றால் மொத்தம் நான்கு உரிமையாளர்கள் அதில் ஒரு உரிமையாளரை பார்த்துள்ளேன். அந்த 4 உரிமையாளர்கள் சொத்தை விற்பதாக என்னிடம் உறுதி அளித்தார்களா என்றால் இல்லை.

**(எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

PRABHAKARAN G

Digitally signed by PRABHAKARAN G
Date: 2024.12.18 17:56:07 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2**
**இராமநாதபுரம்**